1989 ஏப்ரல் 26]

அதன் மூலமாக பாசனம் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தந்தார்கள். ஆனால் வரி விதிப்பதை எல்லா ஆயக்கட்டு களுக்கும் சேர்த்து மதகுகளில் வரும் தண்ணீருக்கும், இந்த எஸ்.ஐ.எம்.பி.-க்கும் இரண்டிற்கும் ஒரே சீரான வரிவிதிப்பை விதிக்கிறார்கள். ஆனால் சில நேரங்களில் தண்ணீர் வராத காரணத்தால் அது வறண்டு காய்ந்து விடுகிறது. கிட்டத்தட்ட 20 ஆயிரம் ஏக்கர்கள் புதியதாக ஆயக்கட்டுகள் சேர்க்கப்படும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகளிடமிருந்து அரசுக்கு பரிந்துரை வரப்பெற்றதாக தகவல் அறிகிறோம். அப்படி சேர்க்கப்படுகிற காலக்கட்டத்தில் இந்த எஸ்.ஐ.எம்.பி.-யில் சேர்ந்திருக்கிற பூமிகளும் அதோடு சேர்க்கப்படுமா? அதற்கு தனியாக மதகு வைத்து நீர்ப்பாசனம் பெறுவதற்கு வழிவகை களை அரசு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே தெரி வித்து இருக்கிறார்கள். பொதுப்பணித்துறையிலிருந்து எங்களுக்கு பரிந்துரை தான் வந்திருக்கிறது. அது அரசினுடைய ஆய்விலே இருக்கிறது. ஆய்வு முடிந்த பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர் களுக்கும் இந்த அவைக்கும் தெரிவிக்கப்படும்.

திருவையாறு பேரூராட்சியில் பாதாள சாக்கடை அமைத்தல்.

137—(*வினா எண். 219)—திரு. துரை சந்திரசேகரன் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருவையாறு பேரூராட்சியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கப்பெறும் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் திருவையாறு பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு ஆய்வு செய்யும் பணிக்காக ரூ. 20,000 பேரூராட்சி நிதியிலிருந்து 1971 ஆம் ஆண்டு அளிக்கப்பட்டு, ஆய்வுப் பணிகள் முடிந்தும் அந்தத் திட்டம் நிறைவேறுவதில் நீண்ட காலதாமதத்திற்கு காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக முன்னுரிமை அடிப்படையில் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. முதலாவதாக அந்த நகரம் மாவட்டத்தின் தலைநகராக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அது சுற்றுலாப் பயணிகள் முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருக்க வேண்டும். மூன்றாவதாக அதன் மக்கள் தொகை ஒரு இலட்சத்திற்கு மேல் இருக்குமானால் அதற்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. திருவையாறு நகரின் மக்கள் தொகை 12,013 தான். அங்கே அது சுற்றுலா மையமாகவும் கருதப்படவில்லை. மாவட்டத் தலைநகராகவும் இல்லை. ஆகவே முன்னுரிமை வழங்குவதில் சில தடைகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுலா மையமாக இல்லையென்று சொல்கிறார்கள். உலக அளவில், இந்திய அளவில் போற்றப்படுகிற ஒரு விழா ஆண்டுதோறும் நடைபெறுகிறது. பல அயல்நாட்டு நபர்கள் அந்த விழாவில் கலந்து கொள்கிறார்கள். மேலும் 12,000-க்கும் மேற்பட்ட மக்கள் ஈக்களாலும் கொசுக்களாலும் பாதிக்கப்பட்டு குறிப்பாக யானைக்கால் நோயால் அவதிப்படுகிறார்கள். எனவே, இந்தத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் விழா நடக்கிற ஊர்களை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னால் ஒரு ஊர் கூட மிஞ்சாது. இருந்தாலும்கூட, சுற்றுலாப் பயணிகள் மையமாக இருப்பது என்பது வேறு, விழா நடைபெறும் ஊராக இருப்பது என்பது வேறு என்ற அடிப்படையில் அந்த நகரத்தின் முன்னுரிமை சிறிது தள்ளி இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்துக்களை கருத்திற் கொண்டு அரசாங்கம் இந்த நகரத்திற்கு உடனடியாக ஏதேனும் செய்ய முடியுமா என்பதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1989 ஏப்ரல் 26]

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறு நகரத்தில் தியாக பிரம்மம் உற்சவம் ஆண்டிற்கு ஒருமுறை சிறப்பாக நடைபெறுகிற நிகழ்ச்சி அங்கே உண்டு. வெளிநாடுகளிலிருந்து கூட ஏராளமானவர்கள் அங்கே வந்து போகிற காரணத்தாலும், அந்தப் பேரூராட்சிப் பகுதியில் மழை பெய்தால் ஏராளமான தண்ணீர் தேங்கி கொசு உற்பத்தி அதிகமாகி அதனால் பல நோய்கள் வருகிற காரணத் தாலும், அரசாங்கத்திற்கு முன்னால் 20,000 ரூபாய் பணம் செலுத்தியிருக்கிற காரணத்தாலும், இவற்றையெல்லாம் மனதில் வைத்து உடனடியாக அந்த பாதாள சாக்கடைத் திட்டத்தை அங்கே கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

ஜனதா கைத்தறிச் சேலைகள் தேக்கம்.

*138—(*வினா எண்-273)—* **திரு. வீ. தமிழ்மணி :** மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேங்கிக் கிடக்கும் ஜனதா கைத்தறிச் சேலைகளை அரசே கொள்முதல் செய்யும் செயற் குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவர் அவர்களே, இல்லை.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜனதா கைத்தறி சேலையை உற்பத்தி செய்கிறவர்கள் படுகின்ற அவதியைக் கணக்கில் கொண்டாவது, அவர்களுடைய வறுமையைப் போக்குவதற்கு இந்தத் திட்டத்தை அமல்படுத்துவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனதா துணி உற்பத்தியைப் பொறுத்த வரையில், கைத்தறி வளர்ச்சி ஆணையாளர் அவர்களால் கோ ஆப்டெக்ஸ் மூலம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்த உற்பத்தித் திட்டம் அறிவிக்கப்பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் சில சங்கங்கள் தரம் குறைவான ஜனதா துணிகளை உற்பத்தி செய்வதாலும், கொடுக்கின்ற உற்பத்தித் திட்டத்திற்கு அதிகமாக உற்பத்தி செய்வதாலும், துணித் தேக்க நிலை ஏற்படுகிறது. தரமான துணியாக இருந்தால் அதை அரசு கொள்முதல் செய்ய பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.